Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

# வருகையின் தூதன்

Vol. 69 | தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். சங்.19:12 | ஜூலை 2023 | No.7

## நொறுங்குண்ட இருதயம் - எழுப்புதலுக்கு ஆரம்பம்!

### *Brokenness - The beginning of Revival*

Roy Hession

எழுப்புதல் என்பது, ஆண்டவரது ஜீவன் மனித இருதயங்களில் ஊற்றப்படுவதாகும். இயேசு எப்போதுமே வெற்றி வீரராயிருக்கிறார். பரலோகில் அவரது வெற்றி ஓயாமல் புகழப்படுகிறது. நமது தோல்விகள், வறட்சிகள் எவையாயினும் அவர் ஒரு போதும் தோல்வியடைவதில்லை. அவரது வல்லமை எல்லையற்றது. நாம் அவரோடு சரியான உறவிலிருக்க வேண்டும். அப்போது அவரது வல்லமை நமது இருதயங்களிலும், வாழ்விலும், சேவையிலும் காண்பிக்கப்படும். அவரது வெற்றி வாழ்வு நம் மூலமாக பிறரை நிரப்பும். அதுவே எழுப்புதலின் சாரம்.

### அவரது சித்தத்திற்கு நொறுங்குதல்

தேவனோடு நெருங்கி உறவாட முதலாவதாக நமது சித்தம் அவரது சித்தத்திற்காக நொறுக்கப்பட கற்றுக் கொள்ள வேண்டும். நொறுங்குதல் எழுப்புதலின் ஆரம்பம். அது வேதனை தருவதும், ஈனப்படுத்துவதுமானஅனுபவம். இருப்பினும் அதுவே ஒரே வழி. 'நானல்ல கிறிஸ்துவே' (கலா.2:20) என்ற நிலை அவசியம். நமக்குள்ளிருக்கும் சுயம் அகற்றப்படாமல் ஆண்டவராகிய இயேசு நம்மில் வாழ்ந்து தம்மை வெளிப்படுத்த முடியாது. விட்டுக் கொடாத சுயம், தான் செய்வதே சரி என்ற எண்ணம், சொந்த வழி, தன் மகிமையை நாடுதல் ஆகியவை தேவ சித்தத்திற்கு தலை வணங்கி, தன் குறைகளை ஒப்புக் கொண்டு, தன் சுய மகிமையை நாடாமல் ஆண்டவராகிய இயேசுவே எல்லாவற்றிற்கும் எல்லாமாகக் கொள்ளப்பட வேண்டும்.

### சுயத்திற்கும் அதன் மனப்போங்கிற்கும் சாக வேண்டும்

நாம் நமது கிறிஸ்தவ வாழ்வை உற்று நோக்கும் போது சுயம் எவ்வளவாய் நம்மில் செயல்படுகிறது என்பதைக் கண்டு கொள்ள முடியும். சுயம் கிறிஸ்தவ வாழ்வு வாழ முயற்சிக்கிறது. அந்த சுயமே கிறிஸ்தவ பணிகளைச் செய்கிறது. இந்த சுயம் அடிக்கடி எரிச்சலடையச் செய்வதும், பொறாமை, கோபம், விமர்சனம், கவலை போன்ற வற்றிற்கும் காரணமாயுமிருக்கிறது. பிறருக்கு நேரான மனப் போங்குகளில் பிடிவாதமாகவும் விட்டு கொடாம லிருப்பதும் சுயமே. வெட்கத்தையும், தன்னுணர்வையும் தந்து நம்மை ஓரப்படுத்துவதும் சுயம் தான். எனவே சுயம் நொறுக்கப்பட வேண்டும். சுயம் நம்மை அடக்கி ஆளும் போது தேவன் நம்மிடம் கிரியை செய்ய முடியாது. ஏனெனில் ஆவியின் கனி நம்மை நிரப்ப சுயம் உடைக்கப்பட வேண்டும்.

### 'ஆம் ஆண்டவரே' என்று சொல்வோமா?

தேவ பணியிலும், நமது பணியிலும் நாம் நொறுக்கப்படுவது இன்றியமையாதது. அவர் தமது அழுத்தத்தை அளிக்கும் போது அதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தேவனோடுள்ள ஐக்கியத்தை ஏற்படுத்த நாம் பாவ உணர்வை அடையும் போது, அவர் நமது பெருமையான சுயம் அவரை வேதனைப் படுத்துவதை நமக்குக் காண்பிப்பார். அப்போது நமது கழுத்தைக் கடினப் படுத்தாமல் தலை வணங்கி தவறை ஒப்புக் கொள்வோம். தேவன் நம்மை உணர்த்தும் போது நம்மைத் தாழ்த்துவது நமது அனுதின அனுபவமாயிருக்க வேண்டும். இந்த அனுபவம் தொடர வேண்டும். இது கடினமான அனுபவம். ஏனெனில் நமது உரிமைகளையும் விருப்பங்களையும் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிருக்கும். சில வேளைகளில் பரிகாரம் செய்ய வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

### இயேசு நமக்காக நொறுக்கப்பட்டார்

இயேசு நமக்காகத் தம்மை நொறுக்கப்படும்படி ஒப்புவித்ததால் நாமும் நொறுக்கப்பட தூண்டப்பட வேண்டும். அவர் தேவனோடிருந்தவர். அவர் தேவனுக்குச் சமமானவர், ஆனால் தம்மைத் தாமே வெறுத்து அடிமையின் ரூபமெடுத்தார். தேவனுக்கும் மனிதருக்கும் பணியாளன் ஆனார். தனக்கென்று அவர் எந்த உரிமையும் கொண்டாட வில்லை. சொந்த இல்லமோ, உடைமைகளோ இல்லாதிருந்தார். மக்கள் அவரைத் துன்புறுத்தினாலும் அவர் எதிர் செய்ய வில்லை. அவர் மீது மக்கள் ஏறிச் சென்றாலும் அவர் தம்மைப் பாதுகாக்க விரும்பவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் நொறுக்கப்படுவதற்காக ஒரு ஆட்டுக்குட்டியைப் போல கல்வாரிக்குச் சென்றார். கல்வாரியில் அனைவருடைய பாவங்களையும் தமது சரீரத்தில் சுமந்தார்.

சங்.22:6-ல் 'நானோ ஒரு புழு, மனிதனல்ல' என்று அங்கலாய்ப்பதைப் பார்க்கிறோம். ஒரு பாம்பிற்கும் புழுவிற்கும் பெரிய வித்தியாசமுண்டு. ஒரு பாம்பை அடிக்க நாம் முற்படும் போது அது திரும்ப தாக்க முற்படும். இது சுயம், ஆனால் ஒரு புழு அதை என்ன செய்தாலும் பதில் செய்வதில்லை, இது நொறுங்குதல். இயேசு நமக்காக ஒரு புழுவைப் போலானார். நாம் புழுவுக்குச் சமமானவர்கள். நாம் நரகத்திற்குச் செல்ல வேண்டியவர்கள். நாம் இப்போது அவரோடு புழுவாகும்படி நமது சரியான இடத்தை எடுக்க வேண்டும். மலைப் பிரசங்கத்தில் கூறப்படும் பழிக்குப்பழி செய்யாமை, எதிரியை நேசித்தல், தன்னலமற்ற ஈகை ஆகியவை நம்மில் காணப்பட வேண்டும். ஆனால் நமக்காக நொறுக்கப்பட தன்னை அர்ப்பணித்த அன்பு மிக மிக மேலானது.

**ஆண்டவரே, பெருமை, கடின கழுத்து ஆகிய எனது சுயத்தை வளைப்பீராக எனக்காகத் தன் தலையை சாய்த்த அவரைக் கல்வாரியில் நோக்கிக் கொண்டு என் தலையை சாய்த்து மரிக்க உதவி செய்யும்**

### தொடர்ந்த அர்ப்பணம்

சுயத்திற்காக மரிப்பது ஒரு தடவையல்ல. முதலாவது தேவன் இவற்றைக் காண்பிக்கும் போது ஆரம்பித்து தொடர்ந்து மரித்தால் மட்டுமே ஆண்டவராகிய இயேசு நம்மூலமாக தொடர்ந்து வெளிப்பட முடியும். இந்த அனுபவம் பல்வேறு விதங்களில் நம் முன் வரலாம். இதற்குத் திட்டமிடுதலோ, காலமோ, பணமோ, நமது விருப்பங்களோ தேவையில்லை. நம்மை சுற்றிலுமுள்ளவைகளுக்கு நாம் அர்ப்பணிக்க வேண்டும். தேவனுக்கு நாம் செலுத்தும் அர்ப்பணம் மனிதருக்கு நாம் காண்பிக்கும் அர்ப்பணத்தால் அளவிடப்படும். **மனிதர் நமக்கெதிராக செய்யும் செயல்கள் தேவன் நம்மை உடைக்கும் அனுபவங்களாகும்.** அதன் மூலம் கிறிஸ்துவின் வாழ்வு நம்மில் கடந்து வர ஆழமான கால்வாயை அவை ஏற்படுத்தும்.

தேவனைப் பிரியப்படுத்தும் ஒரே வாழ்வு அல்லது வெற்றியின் வாழ்வு அவரது வாழ்வு தான். நாம் எப்படி முயற்சித்தாலும் அப்படி வாழ முடியாது. நமது வாழ்வு எதிரானதாகவே இருக்கிறது. அவரது வாழ்வால் நிரப்பப்பட அனுதினமும் நாம் சாக வேண்டும்.

*(3-ம் பக்கம் பார்க்க)*

**அறிவிப்பு**

**வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்**
**உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்**
Mobile : **95432 21008**
Whatsapp : **9489740295**
e-mail:varukayinthoothan@hotmail.com

# வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony


## 2023-ம் ஆண்டு பத்திரிக்கை அனுப்ப

1. எல்லா ஊழியங்களைப் போல **மாதந்தோறும்** வருகையின் தூதன் பத்திரிக்கை பணியை தாங்குங்கள்.
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.
3. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி சிறப்பு காணிக்கைகள் அனுப்புங்கள்.

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,**

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

**"…. நீர் (இயேசு) சீரேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்ல, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள்"** யோ. 11:3

**ஆண்டவரை நேசித்த குடும்பம் - ஆண்டவர் நேசித்த குடும்பம்**

**2023 ஜூலை** மாத பத்திரிகைக்காக என் தேவனை நன்றியோடு துதிக்கிறேன். இம்மாதம் ஆண்டவரை நேசித்த குடும்பத்திற்கு நடந்த காரியத்தை குறித்து சிந்திப்போம். யோவான் 11-ம் அதிகாரத்தில் காணப்படும் சம்பவம் நாம் யாவரும் அறிந்ததே. **"மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானியா கிராமத்திலுள்ளவனாகிய லாசரு என்னும் ஒருவன் வியாதிப்பட்டிருந்தான்."** யோ. 11:1

மரியாளைக் குறித்து வேதம் இவ்வாறு கூறுகிறது. **"கர்த்தருக்குப் பரிமளதைலம் பூசி, தன் தலை மயிரால் அவருடைய பாதங்களை துடைத்தவள் அந்த மரியாளே; "** யோ. 11:2

இந்த குடும்பம் **ஆண்டவரை நேசித்த குடும்பம்-ஆண்டவர் நேசித்த குடும்பம்.** இவர்களிடம் இயேசுவும் அன்பாயிருந்தார் என்று யோ. 11:5 பார்க்கிறோம். அங்கும் வியாதி வருகிறது.

நம்மில் சிலர் நினைக்கலாம் நான் ஆண்டவரை நேசிக்கிறேனே. உண்மையும் உத்தமமாக பின்பற்றுகிறேனே. ஏன் எனக்கு இத்தனை கஷ்டங்கள், இழப்புகள், பிள்ளைகளின் எதிர்காலம் கேள்வி குறியாக இருக்கிறதே? என அங்கலாய்கலாம்.

ஆண்டவர் நேசித்த லாசருவின் குடும்பத்திலும் இப்படிப்பட்டதான ஓர் சூழ்நிலை. **"அப்பொழுது அவனுடைய சகோதரிகள்: ஆண்டவரே, நீர் சீரேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்ல, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள்."** யோ. 11:3

சில வேளைகளில் நாமும் இப்படியான சூழ்நிலைகள் வரும் போது பரிகாரங்களை நாடுகிறோமா? அல்லது சிலுவையில் நமக்காக பரிகாரம் செய்த பரிகாரியாகிய இயேசுவிடம் போகிறோமா? மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும் பரிகாரியாகிய ஆண்டவரிடம் சென்றார்கள்.

ஆனால் இங்கு ஆண்டவர் உடனே வரவில்லை. இரண்டு நாள் தாமதமாய் வருகிறார். (யோ. 11:6) இயேசு வந்தபோது அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலு நாளாயிற்றென்று கண்டார். (யோ. 11:17)

சூழ்நிலைகள் பிரதிகுலமாய் மாறலாம். சூழ்நிலைகளை காட்டிலும் பெரியவர் நம்மோடிருக்கிறார். சில பிரச்சனைகள் தீராமல் காலம் நீண்டு கொண்டே போகலாம். நாறுமே, நாலு நாளாயிற்றே, என்கின்ற சூழ்நிலைகளில் நம்பிக்கையற்று காணப்படலாம் (யோ. 11:39). மார்த்தாளும் இதுபோல் காணப்பட்டாள். **"இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்ட போது, ..... இயேசுவினிடத்தில் வந்து ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்"** என்று கூறுகிறாள் (யோ. 11:20,21).

இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார் (யோ. 11:23). அப்போதும் அவள் விசுவாசிக்கவில்லை. உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள். **"இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்"** என்றார் (யோ. 11:25).

மரித்துப்போனதாய், நாறிப்போனதாய் காணப்படுகின்ற பிரச்சனைகளிலும் நம்பிகையற்ற சூழ்நிலைகளிலும் நம்பிக்கை நாயகனாம் இயேசுவை நோக்கி பார்ப்போமானால் நம் வாழ்கையிலும் நறுமணம் வீச செய்வார், அற்புதங்களை ருசிக்க முடியும். **"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்து பாருங்கள், அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்"** சங். 34:8.

பின்பு இயேசு கல்லறையினிடத்திற்கு வந்து அதின் மேல் வைக்கப்பட்டிருந்த கல்லை எடுத்துப் போடுங்கள் என்றார். அப்போது மார்த்தாள் நாறுமே நாலு நாளாயிற்றே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்கு சொல்லவில்லையா என்று கூறி லாசருவை உயிரோடு எழுப்பி தன்னை நேசித்த குடும்பத்துக்கு அற்புதம் செய்தார்.

நாமும் நம்முடைய பிரச்சனைகளிலிருந்து விடுதலை பெற தடையாய் காணப்படுகின்ற கல்லை எடுத்துப் போடும் போது ஆண்டவர் நம்முடைய வாழ்கையிலும் அற்புதம் செய்வார். மரித்து போனதாய் காணப்படுகின்ற பிரச்சனைகளிலிருந்து விடுதலை தருவார். **விசுவாசிப்போம் தேவனுடைய மகிமையை காண்போம்.** தேவன் நமக்கு உதவி செய்வாராக.

**ஆசிரியர் குறித்து.....**

ஆசிரியர் **வெஸ்லி தேவதாசன்** அவர்கள் மேய் மாதம் 14-ம் தியதி இரவு உடல் நல குறைவினால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 16-ம் தியதி வீடு திரும்பினாலும், ஜூன் மாதம் 14-ம் தியதி வரை வீட்டிலேயே மிகவும் பெலவீனமாய் இருக்கிறார்கள். அவருடைய பரிபூரண சுகத்திற்காக பாரத்தோடு தினமும் ஜெபிக்கும்படி அதிக பட்சமாய் கேட்கிறேன்.

**உபவாச ஜெபம் குறித்து.....**

மே மாதம் உபவாச ஜெபம் நடைபெறவில்லை. ஜூன் மாத உபவாச ஜெபம் குறித்த அறிக்கை இடமில்லாத படியால் அடுத்த இதழில் வெளி வரும்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.


அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

கிறிஸ்துவுக்குள்,
**W. சாமுவேல் பின்னி**


## அறிவிப்புகள்

**நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் பத்திரிகை பதிவு எண், தொலைபேசி எண் இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.**

**கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:**

**வருகையின் தூதன்**
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
**Ph. :** 95432 21008

**VARUKAYIN THOOTHAN**
Newport Street,
Nagercoil-629 001.
**Ph. :** 95432 21008

**காசோலை** *(Cheque & Draft)*
**வெஸ்லி தேவதாசன்** (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

**வருகையின் தூதன் பத்திரிகை பணி**
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
**Punjab National Bank**, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

**வருகையின் தூதன் உபவாச ஊழியம்**
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
**I.O.B.**, Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

**வருகையின் தூதன் முன்னேற்றப்பணி**
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
**Canara Bank**, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### வழிந்தோடும் பாத்திரங்கள்

நொறுங்குதல் எழுப்புதலின் ஆரம்பம் மட்டுமே. எழுப்புதல் என்பது தூய ஆவியால் நிரப்பப்பட்டு வழிந்தோடும் அனுபவம். அது வெற்றியின் வாழ்வைத் தரும். நாம் ஆவியால் நிரப்பப்பட்டிருக்கிறோமா? நாம் நிரப்பப்பட்டிருந்தால் அது தற்பெருமையல்ல. நிரப்பப்படுவதும், வழிந்தோடுவதும் தேவனுடைய செயல்-அவருடைய கிருபை மட்டுமே. நாம் செய்ய வேண்டியது நமது நொறுக்கப்பட்ட, வெறுமையான இருதயத்தை அவர் நிரப்ப அனுமதிக்க வேண்டும். ஆண்ட்ரூ முர்ரே என்ற பக்தன், "தண்ணீரானது பள்ளத்தை நோக்கிச் சென்று அதை நிரப்புவது போல, நமது உள்ளங்கள் வெறுமையாகவும், தாழ்மை யாகவும் இருப்பதைக் காணும்போது, தேவனுடைய மகிமையும் வல்லமையும் அதற்குள் பாய்ந்து செல்லும்" என்று குறிப்பிடுகிறார்.

மனித இருதயம் இயேசுவிடம் நீட்டப்படும் ஒரு வெறும் பாத்திரமாக எடுத்துக் கொள்ளலாம். அவர் அதை ஜீவ தண்ணீரால் நிரப்ப வேண்டும். இயேசு ஜீவ தண்ணீர் நிறைந்த பொற் பாத்திரத்தை வைத்திருப்பதாக காண்பிக்கப்படுகிறார். அவர் கடந்து செல்லும் போது நமது பாத்திரங்களை பார்க்கிறார். அவை வெறுமையாகவும் சுத்தமாகவுமிருந்தால் ஜீவ தண்ணீரால் நிரம்பி வழியும்படியாகச் செய்கிறார். அவர் கடந்து செல்லும் போதெல்லாம் பாத்திரம் வழிந்து ஓட வேண்டும். அது 'என் பாத்திரம் நிரம்பி வழிகிறது' என்று தாவீது சொன்ன போது அவனுடைய அனுபவமாயிருந்தது.

நீங்களும் நானும் ஆசீர்வாதங்களால் நிரம்பி வழிந்து பிறரையும் நிரப்ப வேண்டும். நமது உள்ளங்களில் தொடர்ந்து சமாதானம் நிரம்ப வேண்டும், இதுவே எழுப்புதல். சுயத்திற்கு மரிப்பது என்பது கஷ்டமானது என மக்கள் எண்ணலாம். ஆனால் அப்படியல்ல. சுயத்திற்கு மரிக்க மறுப்பது தான் கஷ்டமானது. எவ்வளவாக அவரோடு மரணத்தை நாம் அறிந்து கொள்கிறோமோ அவ்வளவாக அவரது வாழ்வை நாம் நம்மில் அறியலாம். அதற்கேற்ற சமாதானமும் நமது உள்ளத்தை நிரப்பும். அவரது ஜீவன் நம் மூலமாக அழிந்து போகும் ஆத்துமாக்களுக்கான இரட்சிப்புக்கான உண்மையான கரிசனையை ஏற்படுத்தும். நம் உடன் கிறிஸ்தவர்கள் அதிக ஆசீர்வாதத்தைப் பெற ஆழமான ஆவலை ஏற்படுத்தும்.

### இரத்தத்தின் கீழ்

நமது பாத்திரத்தில் பாவம் காணப்பட்டால் இயேசு அதை நிரப்ப முடியாது. அசுத்தமான பாத்திரத்தை அவர் நிரப்ப மாட்டார். சுயத்திலிருந்து எழும்பும் எந்த சிறிய காரியமும் பாவமே. சேவையில் சுயபலம் காணப்பட்டால் அது பாவம். கஷ்டங்களின் போது சுயபரிதாபம், பணிகளில் சுய நாட்டம், ஓய்வு நேரங்களில் சுய சிந்தனை, கோபம், சுய பாதுகாவல், சுய உணர்வு, கவலை, பயம் ஆகிய யாவும் சுயத்திலிருந்து உற்பத்தியாகின்றன. எனவே அவை பாவம், அவை நமது பாத்திரத்தை அசுத்தப்படுத்துகின்றன.

ஆனால் இவை யாவும் இன்னொரு பாத்திரத்தில் ஊற்றப்பட்டு, கெத்சமெனேயிலே ஒரு வினாடி குடிக்கத் தயங்கி கடைசி வண்டல் வரை கல்வாரியில் குடித்து முடித்துவிட்டார். நம்முடைய பாத்திரங்களில் என்ன இருக்கிறது என்பதை அவரிடம் கேட்டு, அவரிடம் கொடுத்தால் அவருடைய தூய இரத்தத்தால் அவற்றைக் கழுகுவார். அவர் கழுகிய பின்பு அது வழிந்தோடும் படி தூய ஆவியால் நிரப்புவார்.

### கழுகுதல் தொடருகிறது

சுத்தப்படுத்தும்படி நிரப்பப் பட்ட பாத்திரத்தில் ஒரு சிறு பொறாமை அல்லது கோபம் சேர்ந்து விடலாம். மறுபடியும் பாத்திரம் அழுக்கடைகிறது. வழிந்தோடும் அனுபவம் தோல்வியடைகிறது.

எழுப்புதல் தொடர்ந்து ஏற்பட நமது பாத்திரத்தை சுத்தமாக வைத்திருப்பது அவசியம். எழுப்புதல் நின்று விடுவதானால் அதற்குக் காரணம் பாவம் ஒன்றே. சாத்தான் நமது பாத்திரத்தில் அதைப் போட்டு விடுகிறான். ஆனால் மறுபடியும் கல்வாரியண்டை சென்று வல்லமையைப் புதிதாகப் பெறும்படி நிமிடந்தோறும் கழுவப்பட்டால் நமது பாத்திரம் நிரம்பி வழியும். எனவே பாவ உணர்வு ஏற்பட்டவுடன் ஆண்டவராகிய இயேசு அதனைத் தமது விலையேறப் பெற்ற இரத்தத்தால் மூடும் படியாகவும் கழுகும்படியாகவும் கேட்க வேண்டும். இயேசுவின் இரத்தத்தை அதிகமாக நம்பும் போது குறைகள் மாறுகின்றன.

### தேவ சமாதானத்தைக் காத்துக் கொள்ளுதல்

வேத வசனம் நமது நடைகளை ஒழுங்குபடுத்தி பாவம் உள்ளே வரும் போது அதைத் தெரிவிக்கிறது. கொலோ.3:15 "தேவ சமாதானம் உங்கள் இருதயத்தை ஆளக்கடவது" என்று கூறுகிறது. பாவம் நமது இருதயத்தின் சமாதானத்தைக் குலைக்கிறது. சமாதானம் நமது உள்ளங்களை ஆள வேண்டும். சமாதானம் குலைக்கப்படும் போது நின்று நாம் செய்த தவறைக் காண்பிக்க தேவனிடம் கேட்க வேண்டும். அவர் காண்பிக்கும் பாவத்தை அறிக்கையிட்டு விட்டு விட வேண்டும்.

தேவ சமாதானத்தால் நிரப்பப் படுவதற்கு ஒரு எளிய முறை இது. தூய ஆவியானவர் இதற்கு உதவி செய்ய வேண்டும்.

### முதல் காலடி

பல வேளைகளில் நாம் செய்த பாவத்தைக் குறித்த எச்சரிப்பை உதாசீனம் பண்ணுகிறோம். நாட்கள் செல்லச் செல்ல சுத்தப்படுத்தப்பட வேண்டும், நிரப்பப்பட வேண்டும் என்ற சிந்தை அற்றுப் போகிறது. எனவே மறுபடியும் ஐக்கியத்தைப் பெற்றுக் கொள்வது கடினமாகிறது. எந்த இடத்தில் இயேசுவின் இரத்தம் பூசப்பட வேண்டும் என்பதை தேவனிடம் கேட்க வேண்டும். அவர் நாம் எப்படி ஆரம்பிக்க வேண்டும் என்பதைக் காண்பிப்பார். நமது கீழ்ப்படிதலும், நொறுங்குதலும் நம்மில் எழுப்புதல் ஏற்பட முதல் அடியாயிருக்கும்.

## மிகப்பெரிய களஞ்சியம்

***The great reservoir***

Charles H. Spurgeon

"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்" நீதி.4:23.

அன்புக்குரியவர்களே, உங்களை உங்கள் இருதயத்தின் களஞ்சியத்திற்குக் கொண்டு சென்று, உங்கள் இருதயங்களை நேராக வைப்பதின் தேவையை உணர்த்தி அதனால் உங்கள் வாழ்வு மகிழ்ச்சியடையவும் பிறர் மகிழ்ச்சியடையவும் விரும்புகிறேன்.

### உங்கள் இருதயம் நிரம்பியிருக்கட்டும்

முதலாவது இருதயம் நிரம்பியிருப்பதின் அவசியத்தை கற்றுக் கொள்ளுங்கள். அந்த தேவை நீங்கள் இந்தக் கேள்விகளைக் கேட்கச் செய்யட்டும்: ஆனால் நான் எப்படி என் இருதயத்தை நிரப்பி வைத்திருக்க முடியும்? எனது உணர்வுகள் எப்படி வலுவாயிருக்க முடியும்? நான் எனது வாஞ்சைகளை எரிந்து கொண்டிருக்கவும் எனது உற்சாகம் தூண்டி விடப்படவும் செய்ய முடியும்?

இவற்றிற்கு விடையளிக்கும் வசனம் "எங்கள் ஊற்றுகளெல்லாம் உம்மில் இருக்கிறது" சங்.87:7 என்று தாவீது பாடுகிறார். உங்கள் ஊற்றுகளெல்லாம் தேவனிடத்திலிருந்தால் உங்கள் இருதயம் நிரம்பியிருக்கும். நீங்கள் கல்வாரியின் பாதத்தில் சென்றால் உங்கள் இருதயம் அன்பாலும் நன்றியாலும் நனைத்து விடும். நீங்கள் தனித்திருந்து தேவனோடு பேசிக் கொண்டிருந்தால் உங்கள் இருதயம் அமைதியால் நிரம்பும். நீங்கள் உங்கள் எஜமானனோடு ஒலிவமலைக்குச் சென்று பொல்லாத எருசலேமை நோக்கிப் பார்த்து கண்ணீர் விட்டால் அப்போது உங்கள் இருதயம் ஆத்தும பாரத்தால் நிரம்பும்.

தூய ஆவியானவரின்றி நாம் எதையும் செய்ய இயலாது. அவரோடு நெருங்கிய உறவுடன் வாழ்ந்தால் உங்கள் இருதயம் வறட்சியடையும் என்ற பயமே கிடையாது. ஜெபமில்லாமல் வாழ்பவர்கள், வேதத்தை வாசிக்காதவர்கள், பரலோக மாரிக்காக மேலே அண்ணாந்து பார்த்து புதிய மாரியைப் பெறாதவர்கள் போன்றவர்களின் இருதயம் உலர்ந்து போயிருக்கும்.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அந்தரங்கத்தில் அவரை நோக்கிப் பார்ப்பவர்களும் தூய்மையான தனிமையுடன் அவருடன் இணைந்திருப்பவர்களும் உன்னதமான வரின் வசனங்களை தியானித்து மகிழ்ந்திருப்பவர்களும், தன் ஆத்துமாவை கிறிஸ்துவுக்கு ஒப்படைத்திருப்பவர்களும், அவருடைய முழுமையில் களிகூறுகிறவர்களும், அவர் போதுமானவர் என்ற திருப்தியுடனிருப்பவர்களும், அவரது இரண்டாம் வருகைக்காக காத்திருப்பவர்களும் இருதயம் நிரம்பி வழிகிறவர்களாயிருப்பார்கள். இருதயம் நிரம்பி வழியும் போது, அவர்களது வாழ்வும் நிரம்பி வழிவதாயிருக்கும்.

"எல்லாக் காவலோடும் இருதயத்தைக் காத்துக் கொள்". தூய ஆவியானவர் அதை நிரப்ப இடங்கொடு. இல்லாவிட்டால் உன் வாழ்வு பெலவீனமானதாகவும், ஆழமற்றதாகவும், மேலோட்டமானதாகவுமிருக்கும்.

## இருதயத்தை பரிசுத்தமாகக் காத்துக் கொள்

கிறிஸ்தவனே, உன் இருதயத்தை பரிசுத்தமானதாகக் காத்துக் கொள், நான் இதை எப்படிச் செய்ய முடியும்? மாராவின் கசப்பான நீரோட்டத்திற்கு இஸ்ரவேல் பிரயாணிகள் தாகத்தோடு வந்தனர். அவர்கள் நாவுகள் எரிபந்தமாகவும், வாயின் மேற்புறம் வெப்பமாயிருந்தும் அந்த கசப்பான நீரை அவர்களால் குடிக்க முடியவில்லை. மோசே எப்படி இதை சரி பண்ணினார்? அவன் ஒரு மரத்தை எடுத்து அந்த நீருக்குள் போட்ட போது அது தெளிவாகவும் இனிப்பாகவும் மாறியதே. *(யாத்.15:25)*

இயற்கையாக உங்கள் இருதயம் மாராவின் நீரைப் போல கசப்பாகவும் அழுக்காகவுமிருக்கிறது. நமது இரட்சகர் நமக்காகத் தொங்கி மரித்த மரமாகிய சிலுவை மரம் இருக்கிறது. அதை உன் இருதயத்திற்குள் செலுத்தினால் அந்த இனிய சிலுவை தூய ஆவியின் உதவியால் உன் இருதயத்தை அதைப் போல மறுரூபப்படுத்தி, தூய்மையானதாக்கும். நம் இருதயத்தில் இயேசு வரும் போது இனிமையான மாறுதல் ஏற்படும். அவரே நமது பரிசுத்தமானார் *1 கொரி.1:31.*

*2 இராஜா. 2:21*-ல் எலியா தண்ணீருக்குள் உப்பை போட்டான் என்று பார்க்கிறோம். நாம் ஆண்டவராகிய இயேசுவின் இரத்தத்தை பயன் படுத்த வேண்டும். நாம் இயேசுவை அறிந்து அவரை நேசித்து, அவரது சிலுவையை, நமது மகிழ்ச்சிக்கும் மேன்மைக்கும் உரியதாக்கிக் கொண்டால் நமது இருதயம் தூய்மையாக்கப்பட்டு, வாழ்வு பரிசுத்தமாக்கப்படும். சிலுவையின் மேன்மையை நமது இருதயத்தில் பதிக்கக் கற்றுக் கொள்வோம். நம்முடைய இரட்சகரை அதிகமாக நேசிப்போம். தூய ஆவியான வரிடம் அதிக அன்பு ஏற்பட ஜெபிப்போம். இயேசுவை அதிகமாக நேசிக்கும் போது, பாவம் எவ்வளவு ஆதாயத்தைக் கொண்டு வந்தாலும்

**"அன்பினால் அவரது பெயரை சுமக்கிறேன் எது இலாபமாயிருந்ததோ அதை நஷ்டமென்கிறேன் எனது முந்திய பெருமை, எனது வெட்கம் என்பேன் எனது மகிமையெல்லாம் அவரது சிலுவை யிலன்றிவேன்"** என்று பாடுவோம்.

நமது இருதயம் சிலுவையால் பரிசுத்தமாக்கப்படும். அது நமது ஆத்து மாவைப் பரிசுத்தமாக்கும். உள்ளத்தின் அறைகளையெல்லாம் தூய்மைப் படுத்தும். கிறிஸ்தவனே இருதயத்தைப் பரிசுத்தமாகக் காத்துக் கொள். அதனிடத் திலிருந்து தான் ஜீவ ஊற்று புறப்படும்.

## இருதயத்தை சமாதானமாக வைத்துக் கொள்

இருதயத்தை சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். அது உன்னை வாதிக்க ஒட்டாதே. தூய ஆவியானவர் தாவீதைக் குறித்து "ராஜாவின் இருதயம் அவனை வாதித்தது" *2 சாமு.24:10* என்கிறார். இருதயம் வாதிக்கப்படுவது ஒரு நல்ல மனிதனுக்கு கை முஷ்டியினால் அடிக்கும் முரட்டு அடிகளை விட கடினமானது. அது நம்மால் நன்கு உணரக் கூடியது. அது இரும்பைப் போல ஆத்துமாவுக்குள் ஊடுருவும். இருதயத்தை நல்ல உணர்வுகளோடு பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

புத்திக்கு எட்டாததும் தேவனால் அருளப்படுவதுமான சமாதானம் உங்கள் இருதயத்தையும், சிந்தையையும் இயேசுக் கிறிஸ்து மூலமாய் காத்துக் கொள்ள நாடுங்கள். முழுமையான பாவ உணர்வுடன் இரவிலே முழங்கால்களை மடக்கி, கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தை அறிக்கையிடுங்கள். காலையில் எழுந்து உங்கள் இருதயத்தை அவருக்கு ஒப்புவித்து பூரண அன்பு, தூய்மை, விசுவாசம் ஆகியவற்றை உள்ளே நிரப்புங்கள். இப்போது சிங்கங்களும், புலிகளும் நிறைந்த உலகிலே பயமின்று செல்லலாம். தானியேல் சிங்கங்களின் கெபியிலே பயப்படவில்லையே. உங்கள் இருதயத்தை சமாதானத்தினால் நிரப்பினால் உங்கள் வாழ்வு மகிழ்ச்சியாயிருக்கும்.

உங்கள் இருதயம் சமாதானப் பிரியமுடையதாயிருந்தால் உங்கள் வாழ்வும் சமாதானமாயிருக்கும். ஏனெனில் இருதயத்திலிருந்து தான் எல்லாம் புறப்படும். இது எப்படி ஆகும்? தூய ஆவியானவர் இருதயத்தினை அமைதிப்படுத்த நாம் கேட்க வேண்டும். கலிலேயாக் கடலின் புயலை அமைதலாயிரு என்று கட்டளையிட்ட குரல் ஒன்றே புயல் நிறைந்த இருதயத்தினை அமைதிப்படுத்த முடியும். மனித இயற்கையின் புயலை சர்வ வல்லவரின் பெலன் ஒன்றே அமைதிப்படுத்த முடியும். அவரிடம் பெலத்த சத்தத்தோடு கூப்பிடுங்கள். அவர் தமது சபையோடு கப்பலின் அடித்தளத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறார். சுயதிருப்தி என்ற நீரில் உங்கள் பரிசுத்தம் அழிந்து போகாமலிருக்க அவரை விழித்தெழும்ப கூறுங்கள். அவர் உங்கள் இருதயத்தில் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தருவாராக. பின்பு உங்கள் வாழ்வு அமைதியாயிருக்கும். வாழ்வை எங்கிருந்தாலும், குழுப்பத்திலிருந்தாலும், சந்தோஷத்திலிருந்தாலும் அமைதியுடன் காத்துக் கொள்ளுங்கள்.

## பிளவுபடாத ஒரு இருதயம்

ஒரு மனிதனின் இருதயத்தில் ஒரே நோக்கத்தை முழுவதுமாக நாட போதுமான ஜீவன் மட்டுமே உள்ளது. நீங்கள் இதில் பாதி அன்பை கிறிஸ்துவுக்கும் மீதமான பாதியை உலகத்துக்கும் அளிக்க முடியாது. ஒருவரும் தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்யக் கூடாது. அனேகர் இவ்வாறு முயற்சித்துத் தோல்வியடைகின்றனர்.

நான் தேடுவதற்கு உலகமும் அதின் இன்பங்களும் தகுதியானால் அவைகளின் பின்னாலே செல்ல வேண்டும். நான் தேவ பக்தியுள்ளவன் போல் மாய்மாலமாக நடக்கக் கூடாது. **கிறிஸ்து** கிறிஸ்துவும் **தேவன்** தேவனுமாகயிருந்தால், நம் முழு இருயத்தையும் அவருக்கே கொடுப்போம். அதை உலகத்தோடு பகிர்ந்து கொள்ளவே மாட்டோம். உங்கள் ஆண்டவர் அவரை முழுவதுமாக உங்களுக்குத் தந்தாரே. முழுமையான அர்ப்பணம் செய்யுங்கள். ஒரே நோக்கத்தோடு உழைப்பீர்களாக.

இதற்காக உங்கள் இருதயத்தை தேவனிடம் ஒப்புக் கொடுங்கள். தூய ஆவியானவரின் அதிக அளவிலான தாக்கத்துக்காக கதறுங்கள். அப்போது உங்கள் ஆத்துமா பாதுகாக்கப்படும். அது ஒரே திசையில் சென்று உங்கள் வாழ்வு ஆழமாகவும் பரிசுத்தமாகவும், தெளிவாகவும், அமைதியாகவும் செல்லும். இதன் கரைகள் தேவனுடைய சித்தமாகவும் அதன் போக்கு கிறிஸ்துவின் அன்பும் அவரைப் பிரியப்படுத்துவதாகவுமிருக்கும்.

## வழிந்தோடும் வாழ்வும் அன்பும்

உங்கள் இருதயம் ஐசுவரியமான நன்மைகளால் நிறைந்திருக்க வேண்டும். ஒரு போதும் தேவனுடைய வார்த்தையை அசட்டை பண்ணலாகாது. அப்போது தான் இருதயம் நல்ல கருத்துகளாலும் புரிந்து கொள்ளுதலாலும் நிரம்பும். உங்கள் சம்பாஷணை உங்கள் வாயிலிருந்து வெளிவரும் போது உங்கள் இருதயத்தைப் போல வளமாகவும், வழவழப்பாகவும், சுவையுடனுமிருக்கும். எனவே இருதயத்தினை வளமான தாகவும், தயாளமும், அன்பும் நிறைந்ததாகவும் வைத்துக் கொள்ளுங்கள். அப்போது உங்களிலிருந்து புறப்படும் ஊற்று உங்கள் இருதயத்தைப் போன்றிருக்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவை உங்கள் உள்ளத்தில் வைத்திருங்கள். அப்போது உங்கள் உள்ளான பகுதியிலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் வளமாகப் பாய்ந்தோடும். அப்போது சீகாரிலுள்ள யாக்கோபின் கிணறு கொடுப்பதை விட திருப்தியான தண்ணீர் கிடைக்கும். எனவே தூய ஆவியானவர் உங்கள் இருதயத்தை நிரப்பும்படி ஜெபியுங்கள். அப்போது உங்கள் வாழ்வும் சம்பாஷணைகளும் உங்கள் அருகிலுள்ளவர்களுக்கு ஒரு ஈவாக இருக்கும். அவர்கள் உங்களைப் பார்க்கும் போது தேவ தூதர்களைப் போல அவர்களுக்குத் தென்படுவீர்கள்.

* * * * * * *

# அர்ப்பணிக்கப்பட்ட சித்தத்தின் வல்லமை

## The power of a surrendered wil

R.A. Torrey (1856 - 1928)

"…. வல்லமை தேவனுடையது" சங்.62:11. ஆனால் இந்த வல்லமையைப் பெறுவதற்கான ஒரே நிபந்தனை, முற்றிலுமான அர்ப்பணமாகும்.

"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாக பாவத்திற்கு ஒப்புக்கொடாமல் உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" ரோ.6:13.

"இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன். முடிவோ நித்திய ஜீவன்" ரோமர் 6:22.

ஆசீர்வாதத்திற்கும் வல்லமைக்குமான மிகப் பெரிய இரகசியம் இந்த வசனங்களில் காணப்படுகிறது. தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள் என்பதே கருத்து. இன்னொரு விதமாகச் சொன்னால் உங்களை முற்றிலுமாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவருடைய சொந்தமாக ஆக்கி, அவர் விரும்புவதை நீங்கள் செய்யவும் அவரது சித்தத்தின்படி உங்களை பயன்படுத்தவும் அனுமதிக்க வேண்டும்.

நான் எதைச் செய்ய வேண்டும் என்று கேட்டால், அதன் பதில் உங்களை முற்றிலுமாக அர்ப்பணியுங்கள் என்பதாகும். அவரிடம், "பரலோக பிதாவே எனது சித்தம் என்பது ஒன்றுமில்லை எல்லாவற்றிலும் உமது சித்தமே என் மூலமாகவும், என்னாலும், என்னைக் குறித்தும் நடைபெறட்டும். உம்முடைய கரத்திலே என்னை எந்த நிபந்தனையுமின்றி அளிக்கிறேன். இப்போது உம்முடைய சித்தத்தை என்னில் நிறைவேற்றும்" என்று ஜெபியுங்கள். அப்படிச் செய்தால் அளவில்லாத அன்பும், ஞானமும், வல்லமையுடைய தேவன் மிகப்பெரிய நற்காரியங்களைச் செய்வார்.

### அர்ப்பணிக்கப்பட்ட சித்தம் சத்தியத்தைக் குறித்த அறிவைத் தரும்

சத்தியத்தைக் குறித்த அறிவு சித்தத்தை ஒப்புவிப்பதால் கிடைக்கிறது. "அவருடைய சித்தத்தின்படி, செய்ய மனதுள்ளவன் எவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான்" யோ.7:17. ஆவிக்குரிய பார்வை தெளிவடைய சித்தம் அர்ப்பணிக்கப்பட வேண்டும். "தேவன் ஒளியாயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருளில்லை" 1 யோ.1:5. ஒளியாயிருக்கிற அவரை நோக்கிப் பிரகாசமடைவோம். அப்போது சகல சத்தியத்தோடும் நமக்கு தொடர்பு ஏற்படும்.

பாவம் அல்லது சுயசித்தம் போல ஆவிக்குரிய கண்களை குருடாக்குவது எதுவுமில்லை. விடுவிக்கப்படாத பிரச்சனைகள் நம்மை தேவனுக்கு அர்ப்பணிப்பதன் மூலம் விடுவிக்கப் படுகின்றன. அந்தகாரம் நிறைந்த இரவுகள் பகலாக மாறுகின்றன.

"கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும், உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்" மத்.6:22,23.

### அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு தான் வெளிச்சத்திற்கும் அறிவுக்கும் காரணமான இரகசியமாயிருக்கிறது.

### அர்ப்பணிக்கப்பட்ட சித்தம் ஜெபத்தில் வல்லமை தருகிறது.

அடுத்து அர்ப்பணிக்கப்பட்ட சித்தத்தால் வாழ்வில் நாம் பெற்றுக் கொள்வது ஜெபத்தில் வல்லமையாகும். விடாப்பிடியான ஜெபத்தின் மிகப் பெரிய இரகசியத்தினை யோவான் தமது சந்தோஷமான அனுபவத்திலிருந்து இப்படி எழுதுகிறார்: "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்ளுகிறதெதுவோ, அதை அவராலே பெற்றுக் கொள்கிறோம்" 1 யோவா.3:22.

வேண்டிக் கொள்கிறதெதுவோ அதைப் பெறுகிறோம். எத்தனை அற்புதமான வார்த்தைகள் காரணத்தைப் பாருங்கள், அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் தேவனுடைய வார்த்தைகளின்படி செய்யும்படி அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை அவருடைய பார்வைக்குப் பிரியமானதைச் செய்வது. அவருடைய சித்தத்திற்கு முழுமையாக அர்ப்பணித்து முழுவதும் அவருக்காக வாழ்வது மேற் கொள்ளும் ஜெபத்தின் இரகசியம்.

ஏன் நாம் கேட்பதைப் பெற்றுக் கொள்ளவில்லை. யோவானை போல அவருடைய கற்பனைகளைக் கைக் கொண்டு, அவருக்குப் பிரியமானவைகளைச் செய்கிறேனென்று நாம் சொல்ல முடியவில்லை. "கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்" சங்.37:4.

யோ.11:42-ல் "நீர் எப்பொழுதும் எனக்குச் செவி கொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்று இயேசு சொல்லுவதைப் பார்க்கிறோம். அவர் தேவனுடைய ஏக குமாரனாயிருந்ததினாலல்ல. ஆனால் "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்". (யோ.6:38) அவர் சொல்லக் கூடியவராயிருந்தார். மேலும் "நான் என்னை அனுப்பின வருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" யோ.4:34 என்றும் கூறியிருக்கிறார். மேலும் எபி.10:7-ல் "தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன்" எனக் கூறுவதையும் பார்க்கிறோம்.

ஜெபத்தினால் மிகப் பெரிய காரியங்களைச் செய்தவர், ஜார்ஜ் முல்லர். ஏனெனில் தேவன் எதைச் செய்ய சித்தமாயிருந்தாரோ அதையே வேத வசனத்தின் மூலம் தேடி ஆராய்ந்து அதன்படி செய்தார். தம்மையே முற்றிலுமாக ஆண்டவருக்கு அர்ப்பணித்தார். இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் செய்தால் தேவனுடைய பலத்த இளவரசர்களாக மாற முடியும்.

### அர்ப்பணம் பரிபூரண சந்தோஷதைக் கொண்டு வரும்

அர்ப்பண வாழ்வின் அடுத்த பயன் இருதயம் சந்தோஷத்தால் நிரம்பி வழிவதாகும். பயங்கரமான சோதனை வேதனை போன்றவற்றின் வழியாகக் கடந்து செல்ல வேண்டிய நிலையில் இயேசு தமது சீஷரிடம் கூறிய வார்த்தைகளை யோவா.15:10-11 வசனங்களில் படித்துப் பார்க்கலாம்.

"நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்". (யோ.15 10,11)

இயேசு பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு தம்மை முற்றிலும் அவரது சத்தத்திற்கு ஒப்புவித்தது போல சீடர்களும் செய்தால் அந்த சந்தோஷத்தை அவர்களும் பெற்று அது நிரம்பி வழியும். நிபந்தனையற்ற முழுமையான அர்ப்பணம் முழுமையான சந்தோஷத்தைப் பெற வழிவகுக்கிறது. அரைகுறை அர்ப்பணம் முழுமையான சந்தோஷத்தைத் தராது.

கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற அனேகர் கிறிஸ்தவத்தின் முழுநன்மைகளையும் பெறுகிறதில்லை. அவர்கள் உலக ஆசீர்வாதங்களையும் பெறுவதில்லை, கர்த்தரின் சந்தோஷத்திலும் பிரவேசிக்கிறதில்லை. அவர்கள் எகிப்தின் வெள்ளரிக் காய்களையும், கொம்மட்டிக் காய்களையும், இறைச்சிப் பானைகளையும் இழந்ததோடு கானானின் பாலையும், தேனையும் உச்சிதமான கோதுமையையும் இழந்து நிற்கிறார்கள். இது மிகவும் மோசமான நிலை. இதை விட்டு எளிதில் வெளியேறலாம். உங்களை தேவனுக்கு முழுமையாக அர்ப்பணித்தால் உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்.

இவ்வித சந்தோஷத்துக்குள் பிரவேசித்திருக்கிற அனேகரை நான்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவேன். சிலர் மிகுந்த கஷ்டத்துடன் இந்த முழுமையான சந்தோஷத்தைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தங்களை முற்றிலும் தேவனுக்கு அர்ப்பணிக்க பயப்பட்டார்கள்.

தேவன் கடினமான காரியங்களைக் கேட்பார் என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. சில வேளைகளில் உலக நன்மைகளை தியாகம் செய்வது கடினமாயிருந்தது. ஆசைகள், அன்பானவர்கள், பணம், நிலம் இவை விட்டு விடப்படக் கூடாதவைகளாயிருந்தன. ஆனால் இவற்றை இழந்தாலும் ஆண்டவரது சந்தோஷம் உள்ளத்தில் பொங்கி வழிவதாயிருந்தது.

### ஒப்படைக்கப்பட்ட சித்தம் கிறிஸ்துவை நமக்கு அளிக்கிறது

அர்ப்பண வாழ்வு அடுத்த படியாக கிறிஸ்துவே நம்மில் வெளிப்படச் செய்கிறது. இயேசு தாமே காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இரவு சீடர்களிடம், "என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான். நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்". *(யோவா.14:21)*

கிறிஸ்துவின் முழுமையான வெளிப்பாடு நம்மில் ஏற்படுவதால் எதிர்கால மகிழ்வான நாளில் "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய எக்காள சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்" *1தெச.4:16.* ஆயினும் இந்த நிகழ்காலத்தில் பிதாவும் குமாரனும் வந்து நம்மில் வாசம் பண்ணுவது சிறப்பானது *யோவா.14:23.*

அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்துவார். இதன் கருத்து எனக்குப் புரியவில்லை என்று சிலர் சொல்லலாம். நீங்கள் உங்களை ஒப்புக் கொடுத்து விட்டீர்களா? எந்தக் கட்டளை பெரியது, எது சிறியது, முக்கியமானது, முக்கிய மற்றது என்று கேட்காமல் அவரது கட்டளை எது எனக் கேட்டு கீழ்ப்படிய வேண்டும்.

*யோவா.20:20*ன்படி, சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். நீங்கள் கர்த்தரிடம் சென்று, நான் என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன். இப்போது உம்மை எனக்குக் காண்பியும் என்று கேட்போமா?

### சித்தத்தின் அர்ப்பணம் தூய ஆவியானவரை நம்மேல் கொண்டு வருகிறது

இறுதியாக சித்தத்தை தேவனுக்கு அர்ப்பணிப்பதால் தூய ஆவியானவரைப் பெற்று அனுபவிக்க முடியும் என அறிகிறோம். *அப்.5:32*ன் படி, "**தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவி**" என்று பார்க்கிறோம்.

எல்லா நிலைகளிலும் பாவம் பரிகரிக்கப்பட்டு தூய ஆவியானவரின் நிறைவுக்காக கெஞ்சுவது அவசியம். ஆனால் எல்லாவற்றிலும் முழுமையான அர்ப்பணிப்பும், ஆண்டவரையே மையமாகக் கொள்வதும் அவசியம்.

எத்தனையோ பேர் வாஞ்சித்து வேதனையோடு ஜெபித்தும் தூய ஆவியானவர் அவர்கள் மேல் வரவில்லை. ஏனென்றால் முழுமையான அர்ப்பணிப்பு அங்கேயில்லை. சுயம் தேவனிடம் ஒப்படைக்கப்படவில்லை.

தேவனிடம் தங்களை ஒப்படைக்கிறவர்கள் அவர்கள் தங்கள் தலைகளைக் குனிந்து, "தேவனே நான் என்னை முற்றிலுமாக உமக்கு அர்ப்பணிக்கிறேன். எனக்காக நான் எதையும் வைத்திருக்கவில்லை. நீர் கட்டளையிடும் யாவையும் நிறைவேற்றுவேன்" என்பார்கள். தூய ஆவியானவர் அவர்கள் மேல் வந்திறங்குவார்.

அவர் அலை போதும் கடல் போல சந்தோஷத்தோடும் வல்லமையோடும் அல்லது சாதுவாகவும் அமைதலோடும் முற்றிலும் ஆட்கொள்பவராகவும் அல்லது சிறிய மெல்லிய குரலாகவும் வந்திறங்கலாம்.

எந்த வழியில் வந்தாலும் அவர் வரும் போது வல்லமை வருகிறது. தூய ஆவியானவர் நம்மீது வரும் போது மிகப் பெரிய வல்லமை வருகிறது என்பது இரகசியம் *அப்.1:8.* அதற்குக் காரணம் ஒப்படைக்கப்பட்ட சித்தமும் வாழ்வுமாகும். தூய ஆவியானவரின் வல்லமை எத்தனை ஆச்சரியமும், ஆசீர்வாதமும் மகிமையுமானது!

உங்களுக்கு இந்த வல்லமை வேண்டுமா? உங்களை தேவனுக்கு ஒப்படையுங்கள். உங்கள் அவயவங்களை நீதியின் ஆயுதங்களாக உயிரோடிருக்கிற ஆண்டவருக்கு ஒப்படையுங்கள். இப்போதே அப்படிச் செய்வீர்களா?

அப்படி தங்களை ஒப்புக் கொடாதவர்களும், ஒப்புக் கொடுக்க தயங்குபவர்களும் எத்தனை மதியீனர். வாழத் தகுதியான வாழ்வை நீங்கள் திருடுகிறீர்கள். நித்தியம் என்பது மலர் போன்றதும் பொன் மயமானதும் சந்தோஷமும் அழகும் மகிமையும் நிறைந்தது. நீங்கள் உங்களை இன்றே அர்ப்பணம் செய்வீர்களா?

**சுயம் நம்மை அடக்கி ஆளும் போது தேவன் நம்மிடம் கிரியை செய்ய முடியாது. ஏனெனில் ஆவியின் கனி நம்மை நிரப்ப சுயம் உடைக்கப்பட வேண்டும்.**

## பரிசுத்தம்

### *Holiness*

Andrew Murray (1828 - 1917)

"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" *1 பேதுரு 1:15-16.*

"அந்தப்படி நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்.... அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" *1 கொரி.1:30,31.*

"....நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும் சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும், இரட்சிப்படையும்படிக்கு தேவன் உங்களைத் தெரிந்து கொண்டார்" *2 தெச.2:13.*

தேவன் நம்மை இரட்சிக்கப்படுவதற்கு மட்டுமல்ல இரட்சிப்பிற்குள் பரிசுத்தத்தைப் பெறவும் தெரிந்தெடுத்திருக்கிறார். இளம் கிறிஸ்தவன் கிறிஸ்துவில் பாதுகாப்பாயிருப்பது மட்டுமல்ல கிறிஸ்துவில் பரிசுத்தமாயுமிருக்க வேண்டும். பாதுகாவலும் இரட்சிப்பும் நம் உலக வாழ்க்கையில் பரிசுத்தத்தில் தான் காணப்படுகின்றன. இரட்சிப்பு பாதுகாவலை மட்டும் உள்ளடக்கியது அது பரிசுத்தத்திலல்ல என்று எண்ணுகிற கிறிஸ்தவன் தன்னை ஏமாற்றுகிறான். இளம் கிறிஸ்தவனே, தேவனுடைய வசனத்தைக் கேள். பரிசுத்தமாயிரு.

நான் ஏன் பரிசுத்தமாயிருக்க வேண்டும்? அழைத்தவர் பரிசுத்தமானவர். அவர் அவரோடு நல்ல உறவும் அவரோடு ஓட்டி வாழும் வாழ்வையும் விரும்புகிறார். தேவனுக்குள் ஒருவன் இரட்சிப்பைப் பெற தேவனைப் போன்ற விருப்பம் இல்லாதிருந்தால் முடியாதே?

தேவனுடைய பரிசுத்தமே அவருடைய உயர்வான மகிமை. அவரது பரிசுத்தத்தில் அவரது நீதியும் அன்பும் இணைந்துள்ளன. அவருடைய பரிசுத்தம் பாவத்திற்கு எதிராக பற்றி எரியும் அக்கினி. அதனால் தான் அவர் தம்மை பாவத்திலிருந்து விடுவித்துக் கொள்கிறார். அன்பினாலே பிறரையும் பாவத்திலிருந்து விடுவிக்கிறார். இஸ்ரவேலின் பரிசுத்தர் நமது இரட்சகர். அவர் தமது ஜனங்களின் மத்தியில் வாசம் பண்ணுகிறார். இரட்சிப்பு, நம்மை அவரிடம் எடுத்துச் செல்வதுடன் அவருடைய பரிசுத்தத்தையும் நம்மோடு இணைக்கிறது. அவர் பரிசுத்தமாயிருப்பது போல நாமும் இராவிடில் அவருடைய அன்பிலும் இரட்சிப்பிலும் பங்கு கொள்ள முடியாது. கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாயிருக்க வேண்டும்.

நான் பெற வேண்டிய இந்த பரிசுத்தம் எப்படிப்பட்டது? கிறிஸ்துவே உங்கள் பரிசுத்தமானார். கிறிஸ்துவின் ஜீவன் உங்களில் இருப்பதே பரிசுத்தம். கிறிஸ்துவில் நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டு பரிசுத்தமாயிருக்கிறீர்கள். கிறிஸ்துவின் மகிமை உங்கள் முழுவாழ்விலும் ஊடுருவ வேண்டும்.

பரிசுத்தம் என்பது சுத்தத்தை விட மேலானது. வேதவசனங்களில்

*(7-ம் பக்கம் பார்க்க)*

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பரிசுத்தத்திற்கு முன்பாக சுத்திகரிப்பைப் பார்க்கிறோம். சுத்திகரிப்பு என்பது தவறுகளை எடுத்து விடுவது அல்லது பாவத்திலிருந்து விடுதலை பெறுவ தாகும். பரிசுத்தம் என்பது நன்மையான தும் தெய்வீகமானதுமான இயேசுவின் தன்மைகளால் நிரப்பப்படுவதாகும். பரிசுத்தம் அவரைப் போலாகும் அனுபவம். உலக ஆவியிலிருந்து பிரிக்கப் படுவதும் தூய தேவனால் நிரப்பப் படுவதுமான அனுபவமாகும். ஆசரிப்புக் கூடாரம் தேவன் வாசமாயிருந்தபடியால் பரிசுத்தமாயிருந்தது. தேவனுடைய ஆலயமாகிய நாமும் அவர் நம்மில் வாசம் செய்யும் போது பரிசுத்தமாயிருக்கி றோம். கிறிஸ்துவின் ஜீவன் நம்மிலிருப் பதே நமது பரிசுத்தம்.

நாம் எப்படி பரிசுத்தமாக்கப் படுவோம். ஆவியானவரின் சுத்திகரிப் பால் மட்டுமே. தேவ ஆவியனவர் தூய ஆவியானவர் எனப்படுகிறார். ஏனெனில் அவர் நம்மைப் பரிசுத்தமாக்குகிறார். அவர் நம்மில் கிறிஸ்துவை வெளிப் படுத்தி மகிமைப்படுத்துகிறார். அவர் மூலமாக கிறிஸ்து நம்மில் வாசம் பண்ணி அவரது தூய ஆவியின் கிரியைகளால் மாம்சம் அழிக்கப்படுகிறது. தேவன் தாமே நமது சித்தத்தையும் அதன் நிறைவேறுதலையும் பொறுப்பெடுத்துக் கொள்கிறார்.

தூய ஆவியானவரால் கிறிஸ்து வின் பரிசுத்தத்தைப் பெற்றுக் கொள்ள எந்த பணியை நாம் செய்ய வேண்டும்? "நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப் படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக் கிறதினாலும், இரட்சிப்படையும்படிக்கு தேவன் உங்களைத் தெரிந்து கொண் டார்." தேவனுடைய பரிசுத்தம் விசு வாசத்தினாலே நமக்குச் சொந்தமாகிறது. முதலாவது பரிசுத்தமாய் வாழ்வதற்கு ஆசை வேண்டும். நம்முடைய மாம்சம் ஆவி ஆகியவற்றிலுள்ள அசுத்தங்களை அறிக்கையிட வேண்டும். தொடர்ந்து அவற்றை தேவனிடம் விட்டு விட வேண்டும். கிறிஸ்துவின் இரத்தத்தால் அவை கழுவப்பட வேண்டும். பரிசுத்தம் இப்போது பரிபூரணமடைகிறது. பின்பு கிறிஸ்துவே நமது பரிசுத்தமானார் என்ற விசுவாசத்தில் நாம் அவருடைய நிறை விலிருந்து நமக்காக ஆயத்தம் பண்ணப் பட்டவைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் கிறிஸ்துவே நமது பரிசுத்தமும் நீதியுமானார் என்பதை முழுவதுமாக உணர வேண்டும். தேவனுக்குப் பிரியமானதை மட்டும் வல்லமையோடு அவர் நம்மில் வல்லமை யுடன் செயல்படுத்துவார் என்று விசு வாசிக்க வேண்டும். இந்த விசுவாசத்தில் தூய்மையில் போதுமான வல்லமை நமக்கு உண்டு என்றும் இந்த வல்லமையை விசுவாசத்தின் மூலம் அவரிடம் ஒவ்வொரு நாளும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அறிந்து கொள்கிறோம். அவர் நமக்கு ஆவியைத் தருகிறார். அது பரிசுத்த ஆவியானவர். அவரால் இயேசுவின் பரிசுத்த வாழ்வு நம்மில் ஏற்படுகிறது.

திரியேகம் மும்மடங்கு பரிசுத்த மானது. அவரே உங்களைப் பரிசுத்த மாக்கும் தேவன். பிதா தமது குமாரனை அளிப்பதின் மூலம் இயேசுவில் உங்களை நிலைப்படுத்துகிறார். குமாரன் உங்க ளைப் பரிசுத்தப்படுத்தி தூய ஆவியான வரை அருளுகிறார். ஆவியானவர் குமாரனை உங்களில் வெளிப்படுத்தி தேவன் வாசம் செய்யும் ஆலயமாக்கு கிறார். அதனால் குமாரன் உங்களில் வாசமாயிருக்க முடியும்.

ஆண்டவரே, இஸ்ரவேலின் பரிசுத்தரே எனது பரிசுத்தமாகுதலுக்காக உமது குமாரனை ஈவாகத் தந்தீரே. நான் சுத்திகரிக்கப்பட்டு விட்டேன். சுத்திகரிக் கும் ஆவியானவர் என்னில் வாசம் பண்ணுவதற்காக ஸ்தோத்திரம். அவர் பரிசுத்தத்தினை என்னில் தந்தமைக்காக ஸ்தோத்திரம். இதைச் சரிவர நான் புரிந்து கொள்ளவும் இந்த அனுபவத்தைப் பெற்று வாழ வாஞ்சிக்கவும் உதவி செய்யும். ஆமென்.

**இருதயம் நிரம்பி வழியும் போது, அவர்களது வாழ்வும் நிரம்பி வழிவதாயிருக்கும்.**

# தேவனால் அனுப்பப்பட்ட ஒரு எழுப்புதலின் தன்மை

***The nature of a God-sent revival***

***The life of Frances Ridley Havergal***

Duncan Campbell

"என்றைக்கும் எங்கள் மேல் கோபமாயிருப்பீரோ? தலைமுறை தலை முறையாக உமது கோபத்தை நீடித் திருக்கப் பண்ணுவீரோ? உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்க மாட் டீரோ?" சங்.85:5,6.

சங்கீதக்காரனின் இந்த வார்த் தைகள் இன்று வாழும் அனேக தேவ பிள்ளைகளின் இதயக் கதறுதலாகவும் இருக்கிறது. உலகில் பல பகுதிகளிலும் தேவனால் அனுப்பப்படும் ஒரு எழுப்பு தலுக்கான பாவ உணர்வு ஏற்பட்டுள்ளது உறுதி. இந்தப் பாவ உணர்வுடன் தேவன் தமது வல்லமையை வெளிப்படுவதற் கான ஒரு தாகமும் ஏற்பட்டுள்ளது. இந்தத் தாகம் அதிக அளவில் அதிகரிப்ப தால் தேவ பிள்ளைகளின் கதறுதலும் அடிக்கடி வெளிப்பட்டுக் கொண்டிருக் கிறது.

### எழுப்புதல் மட்டுமே நமது ஒரே நம்பிக்கை

"ஆ உமது நாமத்தை சத்துருக் களுக்குத் தெரியப்பண்ணுவதற்கும், ஜாதிகள் உம்முடைய சந்நிதிக்கு முன் தத்தளிப்பதற்கும், தேவரீர் வானங் களைக் கிழித்திறங்கி, உருக்கும் அக்கினி எரியுமாப்போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப் பண்ணுமாப் போலவும், பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும் படி செய்யும்" ஏசா.64:1,2. தீர்க்கதரிசியின் இந்த ஜெபத்தில் இரு அடிப்படை விஷயங்கள் சொல்லப்படுகின்றன. தேவன் இறங்கி வருமட்டும் மலைகள் உருகுவதுமில்லை, பாவிகள் நடுங்குவது மில்லை. ஆனால் தேவன் தமது கரத்தைக் காண்பித்து, தமது வல்லமையை விளங் கப்பண்ணி, வயல் நிலத்தைக் கையாண் டால் நிர்விசாரம், உலகப் பொருளுக் கான வேட்கை, மானிடம் போன்ற பர்வதங்கள் அவரது பிரசன்னத்தால் உருகி தனிநபர்கள் மட்டுமல்ல தேசங்கள் நடுங்க ஏதுவாகும்.

சுவிசேஷ களங்களில் மனிதன் மிகவும் நன்றாக உழைப்பது உண்மை யாயினும் சமுதாயங்கள் தொடப்பட வில்லை. ஆலயங்கள் நிரம்பி வழிவதைக் காண்கிறோம். ஆயிரக்கணக்கானோர் பீட அழைப்பின் போது முன்னே வரலாம். இவையெல்லாம் தேவனில்லா மலே நடைபெறுகின்றன. நீங்கள் எப்படி எடுத்துக் கொண்டாலும் இவை யெல்லாம் மனித முயற்சியில் ஏற்படு கின்றன என்பதை மறுக்க இயலாது.

ஹோவார்டு ஸ்பிரிங் என்பவர் இதைக் குறித்து எழுதும் போது, "தேவனுடைய ராஜ்யம் பரம்ப வேண்டு மானால் சபைகள் மக்களாலல்ல, தேவனால் நிரப்பப்பட்டவைகளாக வேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

### சுவிசேஷ பணிக்கும், எழுப்புதலுக்கு குமிடையிலான வேறுபாடுகள்

வெற்றிகரமான சுவிசேஷப் பணி என்பதில் சுமார் 100 வரையிலான மக்கள் இயேசுகிறிஸ்துவை அறிக்கையிட்டா லும் ஒரு வருடம் செல்லும் போது 50 பேர் கூட நிலை நிற்பதில்லை. சமூக வாழ்வு தொடப்படுவதேயில்லை. கேளிக்கை அரங்குகள் நிரம்பி வழி கின்றன. ஏனெனில் சமூக வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால் எழுப்புதலின் மூலம் தூய ஆவியானவர் இறங்கி வந்து, பரலோகக் காற்று வீசும் போது திடீரென சமூகம் தேவ உணர்வைப் பெறுகிறது. வாலிபரையும், நடுவயதினரையும், வயோதிபரையும் தேவனைப் பற்றிய உணர்வு பிடித்துக் கொள்கிறது. அதனால் ஹெப்ரைட்ஸ் தீவில் எழுப்புதல் ஏற்பட்டது போல ஒரே இரவில் இரட்சிப்பைப் பெற்றவர் களில் 75 சதமானவர்கள் ஜெபக் கூடுகை யினருகில் வருமுன்பு இரட்சிப்படை வார்கள்.

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் சங்.111:10. இதுவே சுவிசேஷப் பணிக்கும் எழுப்புதலுக்கு மான வேறுபாடு. எனவே தான் மாநாடு களைக் கூட்டுவது போன்ற மனித முயற்சிகளில் மட்டும் நம்பிக்கையில்லை என்கிறேன். ஆயினும் இம்மட்டும் எடுக்கப்பட்ட முயற்சிகள், நிறைவேற்றப் பட்ட பணிகள் போன்றவற்றிற்காக ஆண்டவரைத் துதிக்கிறேன். அங்கு மிங்குமாக சேர்க்கப்பட்டு வரும் ஒரு சில ஆத்துமாக்களுக்காகவும் உழைக்கிற

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களுக்காகவும் தேவனை மகிமைப் படுத்துகிறேன். ஆனால் நமது ஒரே முக்கிய தேவையும், கிறிஸ்தவ சபையை எதிர்நோக்கும் பிரச்சனையின் ஒரே பதிலும் தேவன் நம்மை சந்திப்பதின் மூலமாகவே ஏற்பட முடியும்.

### பெர்னரேயில் எழுப்புதல்

பெர்னரே என்னும் சிறிய தீவில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன். நான் பிரிட்டனிலுள்ள பாங்கார் என்னுமிடத்தில் எழுப்புதல் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தேன். நானும் கூட்டத்தின் தலைவரும், செய்தியாளரும் பீடத்தில் அமர்ந்திருந்தோம். அப்போது திடீரென கூட்டத்திலிருந்து எழுந்து மேற்கூறிய தீவுக்குச் செல்லும்படியாக உணர்த்தப்பட்டேன். தலைவரிடம் அதைக் கூறிய போது அவர் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. நானே முடிவுரை கூற வேண்டியதாயிருந்தது. ஆயினும் என்னில் ஏற்பட்ட அந்த உணர்வைத் தடுக்க முடியாமல் புறப்பட்டுச் சென்றேன். விமானங்களிலும், காரிலும், வள்ளத்திலும் பிரயாணம் பண்ணி தீவை அடைந்தேன். அது சுமார் 500 மக்களைக் கொண்ட ஒரு சிறு தீவு. என்னை வள்ளத்தில் கொண்டு சென்ற வள்ளக்காரனிடம் நான் பேச முடியவில்லை. அந்தத் தீவு எனக்குப் புதியது. முன்பின் தெரிந்த யாரும் அங்கு இருக்கவில்லை. எனக்கு எதிராக வந்த ஒரு வாலிபனிடம் என்னை சமீபத்திலுள்ள ஒரு ஊழியக்காரரிடம் அழைத்துச் செல்லும்படி கூறினேன்.

அவனோ இங்கு எந்த ஊழியருமில்லை என்றும், இருக்கும் இரு சபைகள் வெறுமையாயிருப்பதையும் தெரிவித்தான். அருகிலுள்ள ஒரு மூப்பரிடமாவது அழைத்துச் செல்லும்படி கூறினேன். அவன் ஒரு குன்றின் மேலிருந்த ஒரு இல்லத்தை எனக்குக் காண்பித்தான். அவனிடம் அங்கு சென்று அந்த மூப்பரிடம் லூயிஸ் தீவிலிருந்து காம்ப்பெல் வந்திருப்பதாகக் கூறும்படி சொன்னேன். அவன் சென்று திரும்பி வந்து, ஹெக்டர் மெக்கென்னன், நான் இன்று வருவதை எதிர்பார்த்திருப்பதாகவும், அவரது சகோதரனுடன் அன்று தங்கும்படியாகவும் கூறியதோடு அதே இரவில் 9 மணிக்கு சபையில் ஒழுங்கு பண்ணியிருக்கும் கூட்டத்தில் பேச வேண்டும் என்று பதில் கொண்டு வந்தான்.

### பெர்னரேயில் எழுப்புதலின் இரகசியம்

டாங்கார் தீவில் ஆலயத்தில் உட்கார்ந்திருந்த போது அந்த நாளின் பகல் முழுவதையும் ஜெபத்தில் செலவிடும்படி தீர்மானித்திருந்தேன். குறிப்பாக வாலிபர்கள் தேவனுக்கும், சபைக்கும் நிர்விசாரமாயிருப்பது அவருக்கு அதிக பாரத்தை அளித்திருந்தது. அவர் மூன்று முறை ஜெபித்ததைக் குறித்து அவரது மனைவி அறை வாசலில் நின்று கேட்டதாகவும், அவர் இப்போது எங்கிருக்கிறார் என்பதை நான் அறியேன், நீரோ அதை அறிவீர், அவரை அனுப்பித்தாரும் என்று ஜெபித்ததாகவும் அவரது மனைவி கூறினாள்.

அன்று மாலை தேவன் அவனது ஜெபத்தைக் கேட்டதாக அவன் உணர்ந்து நான் அன்றே அத்தீவில் வந்து சேர்வதாக நம்பினான். அன்று அந்த ஆலயத்தில் நான் பிரசங்கிக்க ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நாங்கள் ஆலயத்திற்குச் சென்ற போது சுமார் 80 பேர் மட்டுமே காணப்பட்டனர். எளிமையான ஒரு ஆராதனை நடைபெற்றது. உண்மையாக நான் இந்தத் தீவுக்கு வழி நடத்தப்பட்டேனா என்ற சந்தேகம் என்னில் எழும்பியது. ஆனால் என்னை விட தேவனோடு அதிக உறவுடைய மக்கள் அங்கிருந்தனர்.

நான் முன்பு குறிப்பிட்ட மனிதர் என்னிடம் வந்து 'சபையில் இந்த இரவு எழுப்புதல் ஏற்படவில்லையே என்று, ஏமாற்றமடைந்து விட்டீர்களா? தேவன் இறங்கி வருகிறார்; எந்த வேளையிலும் அவர் கிரியை நடப்பிக்கலாம்' என்றார்.

இவர் தான் தேவனோடு மிகுந்த ஐக்கியமுடையவர். "கர்த்தருடைய இரகசியம், அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது" சங்.25:14.

### தேவன் இறங்கி வந்து விட்டார்

இப்போது நாங்கள் ஆலயத்திலிருந்து இறங்கி வருகிறோம். ஆலயம் ஒரு குன்றின் மீதுள்ளது. முக்கிய ரஸ்தா ஆலயத்திலிருந்து 300 முழம் தாழ்வினுள்ளது. மக்கள் முன்னால் இறங்கி நகர அவர்களுக்குப் பின்னால் நாங்கள் இறங்கி வருகிறோம். திடீரென அந்த மூப்பர் நின்று விட்டார். தலையிலிருந்த தொப்பியை எடுத்துவிட்டு, "காம்ப்பெல் அவர்களே தேவன் இறங்கி வந்து விட்டார். என்ன நடக்கிறதென்று பாருங்கள்!" என்றார். சபை மக்களை நான் பார்த்த போது அவர்கள் பாவ உணர்வு பெற்றவர்களாக முழங்காலில் நின்று கதறுவதைக் கண்டேன். அன்று இரவு 11 மணிக்கு ஆரம்பித்த ஜெபக் கூடுகை காலை 4 மணி மட்டும் தொடர்பாக நடந்தது. அந்தத் தீவு திடீரென தேவனால் பிடிக்கப்பட்டுவிட்டது. அது காம்ப்பெல் அங்கு சென்றதனாலல்ல.

ஆனால் அந்த பீடத்தில் அன்று நான் தேவசத்தத்தைக் கேட்குமளவிற்கு அவரருகில் இருந்ததை எண்ணி அவரைத் துதிக்கிறேன். அதை அடிக்கடி நினைவு கூருகிறேன். அவர் பேசியதைக் கேட்பதற்கேற்ற இடத்தில் நான் இராதிருந்தால் பெர்னரேயில் எழுப்புதல் ஏற்பட்டு அந்தத் தீவு முழுவதும் தேவன் பலத்த கிரியைகளை செய்திருக்க முடியாது.

அந்த இரவிலே அந்தத் தீவின் அனைத்து வீடுகளும் சந்திக்கப்பட்டு விட்டன. தேவனைப் பற்றிய விழிப்புணர்வு, அவரைப் பற்றிய பயம் ஆகிய வற்றால் தீவு நிரப்பப்பட்டது. வல்லமையுள்ள தேவனுடைய செயலால் அந்தத் தீவு ஒரு பெரிய மாற்றத்தைக் கண்டது. இதுவே உண்மையான எழுப்புதல்.

"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள், தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்திற்கு ஷேமத்தைக் கொடுப்பேன்" 2 நாளா.7:14. இதுவே எழுப்புதலின் அடிப்படை.

இந்த வேதவசனத்தை நிறைவேற்றிய ஒரு மனிதன் அந்தத் தீவில் இருந்தான். உடன்படிக்கையை நிறைவேற்றுகிற தேவன் உண்மையுள்ளவர். எனவே தமது மகிமையைக் காக்கிற தேவன் அவனது ஜெபத்தைக் கேட்டு பதிலளித்தார்.

ஆவிக்குரிய உயிர்ப்பித்தலுக்கு அடிப்படைக் கருத்து இதுவே. எழுப்புதல் ஏற்பட தேவனுடைய நிபந்தனைகளை நிறைவேற்ற ஆயத்தமான மக்களை அவர் தேடுகிறார். சங். 85:1-13 வாசிக்க.

**நமக்குள்ளிருக்கும் சுயம் அகற்றப்படாமல் ஆண்டவராகிய இயேசு நம்மில் வாழ்ந்து தம்மை வெளிப்படுத்த முடியாது.**


**Contact:**

**VARUKAYIN THOOTHAN**
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
**SOUTH INDIA.**

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com


### சிந்தனைக்கு

ஆசரிப்புக் கூடாரம் தேவன் வாசமாயிருந்தபடியால் பரிசுத்தமாயிருந்தது. தேவனுடைய ஆலயமாகிய நாமும் அவர் நம்மில் வாசம் செய்யும் போது பரிசுத்தமாயிருக்கிறோம்.

ஜெபமில்லாமல் வாழ்பவர்கள், வேதத்தை வாசிக்காதவர்கள், பரலோக மாரிக்காக மேலே அண்ணாந்து பார்த்து புதிய மாரியைப் பெறாதவர்கள் போன்றவர்களின் இருதயம் உலர்ந்து போயிருக்கும்.

மனித இயற்கையின் புயலை சர்வ வல்லவரின் பெலன் ஒன்றே அமைதிப்படுத்த முடியும். அவரிடம் பெலத்த சத்தத்தோடு கூப்பிடுங்கள். அவர் தமது சபையோடு கப்பலின் அடித்தளத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறார்.

சுயதிருப்தி என்ற நீரில் உங்கள் பரிசுத்தம் அழிந்து போகாமலிருக்க அவரை விழித்தெழும்ப கூறுங்கள்.

*Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.*
*Editor : Wesley Devadason*